**தி.ஐ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அம்பத்தூர்**

அரையாண்டுத்தேர்வு -2017

மதிப்பெண் :60

பதிவு எண்: …………… நேரம் : 1:30மணி

**அ. பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடையளி (ஒரு பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)** **( 5x1=5)**

அது ஒரு கடற்கரைக் கிராமம். அங்கு அடிக்கடிப் புயல் வீசும். கடல்நீர் ஊருக்குள் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தும். எனவே ஊர் மக்கள் கடற்கரையை ஒட்டி நீண்ட தடுப்புச் சுவரைக் கட்டி வைத்தனர்.

தடுப்புச் சுவரை ஒட்டி நீண்ட பாதை இருந்தது. குமரன் இந்தப் பாதை வழியாகத்தான் தினமும் பள்ளிக்குச் செல்வான். அவன் பள்ளி மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.

அது குளிர்காலம். சீக்கிரமே இருட்டி விட்டது. பலத்த காற்றும் வீசியது. எந்த நேரமும் புயல் வரும் போலத் தோன்றியது. பள்ளிக்கூடம் முடிந்து குமரன் வேக வேகமாக வீடு திரும்பிக் கொண்டு இருந்தான்.

அப்போது பாதையில் நீர் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். ‘எங்கிருந்து நீர் வருகிறது?’ சுற்றும் முற்றும் பார்த்தான். தடுப்புச் சுவரிலிருந்து நீர் கசிவதைக் கண்டுபிடித்தான்.

‘ஐயோ! சுவரில் சிறுதுளை இருக்கிறதே! இது பெரிதாகிவிட்டால் சுவர் உடைந்து விடுமே! வெள்ளம் புகுந்து கிராமமே அழிந்துவிடுமே! என்ன செய்யலாம்?’ என்று யோசித்தான்.

துளையை அடைக்கக் கற்கள் கிடைக்குமா என்று தேடினான். அங்கு எதுவும் கிடைக்கவில்லை. சட்டென்று தன் கையை வைத்துத் துளையை அடைத்தான்.

வினாக்களுக்கு விடையளி:

1.தடுப்புச் சுவரை ஒட்டி என்ன இருந்தது?

தடுப்புச்சுவரை ஒட்டி நீண்டபாதை இருந்தது.

2.குமரன் ஏன் வேகவேகமாக வீடு திரும்பினான்?

குளிர்காலம் என்பதால் /பலத்த காற்று வீசியதால்/புயல் வரும் அபாயம் இருப்பதால்

3. சுவரில் என்ன இருந்தது?

சுவரில் பெரியதுளை இருந்தது

4.எங்கிருந்து நீர் கசிந்தது?

தடுப்புச் சுவரிலிருந்து நீர் கசிந்தது.

5.குமரன் எதனை வைத்துத் துளையை அடைத்தான்?

குமரன் கையை வைத்துத் துளையை அடைத்தான்.

**பகுதி- ஆ**

**அ. ரோபோ தன்னைப் பற்றித் தானே பேசினால். . . . . என்ன பேசியிருக்கும் என எழுதுக.(5 வரிகளுக்குக் குறையாமல்)** **(5 )**

மாணவர்கள் சொந்த நடையில் வாக்கியங்களை அமைத்து எழுதுவர்.3 பிழைக்கு 1/2மதிப்பெண் குறைக்கப்படும்.

## பகுதி-இ

**அ. பின்வரும் பழமொழிகளை நிறைவு செய்க:** (3X1=3)
(ஒரு பிழைக்கு 1/2மதிப்பெண் குறைக்கப்படும்)

1. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
2. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

**ஆ. இரு பொருளைத் தரும் ஒரு சொல்லை எடுத்து எழுதுக:** (3x1=3 )
(விடை சரியாக இருந்தால் மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்)

1. ஆடை நெய்ய உதவுவது
   திருக்குறள் உலகம் போற்றும் } நூல்
2. பாட்டுக்கு நீயும்
   புல்லை மேயும்__________ } ஆடு
3. மலர்கள் பல சேர்ந்தால்
   சூரியன் மறையும் பொழுது } மாலை

மாலை, நூல்
ஆடு

**இ .ஆங்கிலச் சொல்லிற்கு தமிழ்ச் சொற்களை எழுதுக.**
**(ஒரு பிழைக்கு 1/2மதிப்பெண் குறைக்கப்படும்)** (2x1=2)

1. agriculture _ வேளாண்மை
2. speaker _ ஒலிபெருக்கி

**ஈ. பின்வரும் தொடர்களைத் திருத்தி எழுதுக :** (3x1=3)
(ஒரு பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)

1. மக்கள் மந்தை மந்தையாய்ச் சென்றனர்.
   மக்கள் கூட்டம்கூட்டமாகச் சென்றனர்.
2. அமுதா, பூந்தோப்பில் பூக்களைப் பறித்தாள்.
   அமுதா,பூந்தோட்டத்தில் பூக்களைப் பறித்தாள்.
3. தென்னந்தோட்டத்தில் தேங்காய்கள் காய்த்தன.
4. தென்னந்தோப்பில் தேங்காய்கள் காய்த்தன.

**உ.சொற்றொடர்களைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க:** (3x1=3)
**(விடை சரியாக இருந்தால் மட்டுமே மதிப்பென் வழங்கப்படும்)**
(வருகவருக,சாரைசாரையாய், மூட்டைமூட்டையாய்,கொத்துக்கொத்தாய்)

1. ரோபோ, விருந்தினர்களை வருகவருக என வரவேற்றது.

2அவரை கொத்துக்கொத்தாய் காய்க்கும்.

3.எறும்புகள் சாரைசாரையாய் செல்லும்.

**ஊ. மயங்கொலிப் பிழைகளைக் களைக :** **(2x1=2)**
**(விடை சரியாக இருந்தால் மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்)**

1.சோலைகளில் பல வன்னமலர்கள் பூத்துக் குலுங்கின.

சோலைகளில் பல வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கின.

2. காய்ந்த விதைக்குப் பழுதிள்ளை.

காய்ந்த விதைக்குப் பழுதில்லை.

## பகுதி - ஈ

**அ. பொருள் தருக: (ஒரு பிழைக்கு1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)** **(3x1=3)**

1. சித்திரம் _ ஓவியம்
2. ஆநிரை _ பசுக்கூட்டம்
3. தெங்கு _ தென்னைமரம்

**ஆ. பிரித்து எழுதுக(ஒரு பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)** **(3x1=3)**

1. கருத்தரங்கு _ கருத்து + அரங்கு
2. வெற்றிலை _ வெறுமை + இலை
3. கணினியின்றி _ கணினி +இன்றி

**இ. சேர்த்து எழுதுக:(விடை சரியாக இருந்தால் மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்)** **(3x1=3)**

1. நெல்+கதிர் _ நெற்கதிர்
2. நலம் + அறிய _ நலமறிய
3. முசுண்டை+ கொடி _ முசுண்டைக்கொடி

**ஈ. எதிர்ச்சொல் தருக:(ஒரு பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)** **(3x1=3)**

1. அருகே x தொலைவில்
2. பின்புறம் x முன்புறம்
3. வெற்றி x தோல்வி

**உ. கோடிட்ட இடங்களை நிரப்புக(ஒரு பிழைக்கு 1/2 மதிபெண் குறைக்கப்படும்) (3x1=3)**

1. நெகிழியால் செய்யப்பட்டபொருளை எரிக்கும்போது வெளியாகும் நச்சுப்புகையின் பெயர் _"டையாக்சின்
2. நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்களில் ஒன்று என்கதை, சங்கொலி, மலைக்கள்ளன்,அவனும், அவளும்,( இவற்றில் ஏதாவது ஒன்று)
3. மூதுரையின் ஆசிரியர் ஔவையார்

**ஊ. பின்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக: (2x2=4)**
**(2பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)**

1.கூட்டம்கூட்டமாக
2. மகிழ்ச்சியாக ( மாணவர்கள் சொந்த நடையில் எழுதுவர்.)

**எ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக: (3x2=6)**
**(3பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)**

1. தோப்பு, தோட்டம் வேறுபாடு யாது?

உழவர்களின் மிகுதியான கண்காணிப்பு மிக்க பயிர்கள் உள்ள இடத்தைத் தோட்டம் என்பர்.

ஒரே வகையான மரங்கள் தொகுப்பாக இருப்பது தோப்பு என்பர்.

2. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய முதல் கடமை என்ன?
சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் செய்யவேண்டிய முதல் கடமை நெழிப்பயன்பாட்டைத் தவிர்த்தல் வேண்டும்.

3.உரமிடுவதனைக் குறித்து வள்ளுவர் கூறியது யாது?
“ஏரினும் நன்றால் எரு இடுதல்” என உரமிடுவதைக் குறித்து வள்ளுவர் கூறியுள்ளார்.

**ஏ. பின்வரும் வினாவிற்கு (ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக. 1x5=5**
**(3 பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்)**

1. பாவேந்தர் தன் கவிதையில் இயற்கையை எவ்வாறு வருணிக்கிறார்?
கோலம் மிகுந்த மயில்,
வாசம் உடைய நற்காற்று,
கண்ணாடி போன்ற நீர் ஊற்று, இன்னிசை பாடும் தேனீக்கள் என்றெல்லாம் இயற்கையை வருணிக்கிறார்.

**ஐ. :அடிமாறாமல் எழுதுக:(3பிழைக்கு 1/2 மதிப்பெண் குறைக்கப்படும்) (4)**

“ நல்லாரைக் காண்பதுவும் ”எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக
நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே _ நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

****************************